# "இதோ, தேவ ஆட்டுக்குட்டி" (1:19-51)

*''எளிய மற்றும் உயர்ந்த சாராள்*'''என்ற குழந்தைகளுக்கான அற்புதமான புத்தகமானது, அஞ்சல் வழியே ஆணை பெற்ற ஒரு மணப்பெண்ணாக மெய்னீ என்ற கடற்கரையிடத்திலிருந்து புறப்பட்டு பிரெய்ரீ புல்வெளியுள்ள இடத்திற்குச் செல்லத் தீர்மானித்த ஒரு பெண்ணைப் பற்றிய கதையொன்றைக் கூறுகின்றது. பிரெய்ரீயைச் சேர்ந்த, மனைவியை இழந்த விவசாயியின் மனைவியாகும் முன்பு அப்பெண், அவருடனும் அவரது இளம் வயது மகன் மற்றும் மகள் ஆகியோருடனும் கடிதங்கள் பரிமாறிக் கொண்டாள். அவள் தனது பூனை மற்றும் கடல் ஆகியவை பற்றி அவர்களுக்குக் கூறினாள், மற்றும் அந்தப் பிள்ளைகள் அவளால் சிகையை அலங்கரிக்கவும் பாடவும் முடியுமா என்று கேட்க எழுதினார்கள். சாராள் தான் ஒருபோதும் சந்தித்திராத குடும்பத்தின் அங்கமாவதற்காக மேற்கு நோக்கித் தனது பயணத்தைத் தொடங்க வேண்டிய வேளை நெருங்குகையில், அவள் பின்வருமாறு எழுதினாள்:

> அன்புள்ள யாக்கோபு,
>
> நான் புகை வண்டியில் வருவேன். நான் மஞ்சள் நிறத் தலையணியை அணிந்திருப்பேன். நான் எளிமையானவளாக, மற்றும் உயரமானவளாக இருக்கின்றேன்.
>
> *சாராள்*[1]

சாராள் வந்து சேர்ந்த நாளன்று அந்தப் புகை வண்டியில் அவளைச் சந்திக்கச் செல்லுகையில் அவர்களின் பரபரப்பை உங்களால் கற்பனை செய்ய முடிகின்றதா? அவர்களின் சிந்தையினூடாக என்ன (எண்ணம்) ஓடிக் கொண்டிருந்திருக்கும்? நான்கு நபர்கள் கொண்ட அந்த நாடகமானது எதிர்பார்க்கப்படுவது என்ன என்பது பற்றிச் சிறிதளவே கருத்துக் கொண்டிருந்தது.

நமது வேதபாடப் பகுதியானது யோவான் 1:19-51, இதே விதமான உறுதிப்பாடின்மை மற்றும் குழப்பத்துடன் தொடங்குகின்றது. இந்த நிகழ்ச்சியில் ஈடுபட்டிருந்த மக்களுக்கு மாபெரும் அற்புதம் நிறைந்த சில செயல்கள் நடைபெற்றன, ஆனால் அவைகளுக்கு எவ்விதத்தில் பதில் செய்வது என்பதில் அவர்கள் நிச்சயமற்று இருந்தார்கள். சிலவற்றிற்காகப் பரபரப்புடன் காத்துக் கொண்டிருந்த உலகத்தினுள் இயேசு பிரவேசித்தார்; அந்தச் சில விஷயங்கள் என்ன என்பதை மக்கள் மிகச் சரியாக அறியாதிருந்ததே ஒரே ஒரு பிரச்சனையாக இருந்தது. இந்த நாசரேத்தூர்

இயேசு உண்மையில் யார் என்பதைக் கண்ணால் கண்ட சாட்சியின் போராட்டத்தினுடைய கண்ணோக்குகளின் மூலமாகக் காண்பிக்கும்படியாக யோவான் சுவிசேஷத்தின் இப்பகுதி தொடங்குகின்றது.

## யோவான் ஸ்நானனின் சாட்சியம் (1:19-34)

இயேசு யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெறும்படி வந்த வேளையில், யோவான் ஸ்நானன் யூதேயாவில் ஒரு கலக்கத்தை உண்டாக்கியிருந்தார். அவரது கரடுமுரடான தீர்க்கதரிசி போன்ற தோற்றமும் மற்றும் தேவனுடைய இராஜ்யம் சமீபித்திருக்கிறது என்ற அவரது வல்லமை நிறைந்த தீர்க்கதரிசி போன்ற பிரசங்கித்தலும் எருசலேமில் இருந்தும், "யூதேயா மற்றும் யோர்தானுக்கு அடுத்த சுற்றுப் புறத்திலிருந்தும்" (மத். 3:5) மக்களை யோவான் ஞானஸ்நானம் கொடுத்த இடத்திற்கு இழுத்திருந்தன. ஒருவேளை பலர், மேசியா தமது பின்பற்றாளர்களைப் பாலைவனத்தில் ஒன்று கூட்டும்படி எதிர்பார்த்திருந்த காரணத்தினால்,[2] யோவான் ஸ்நானன் உண்மையில் யாராயிருந்தார் என்பது பற்றி மக்கள் யூகிக்கத் தொடங்கினர். உணர்வெழுச்சியானது போதிய அளவுக்குப் பெரிதானபோது யூதர்கள்[3] பெரும் திகைப்பு அடைந்த பொழுது, யோவான் தம்மைக் குறித்துக் கூறிக் கொண்டது என்ன என்பதைக் கண்டறிவதற்காகச் சில ஆசாரியர்களையும் லேவியர்களையும் அவரிடத்திற்கு அனுப்பினார்கள் (1:19).

யோவான் ஸ்நானன் தமது பிரசங்கித்தல் மற்றும் மனமாற்றம் அடையச் செய்தல் ஆகிய இரண்டிலும் ஒரு நேரடியான போக்குள்ளவராகவும், தாம் அர்த்தப்படுத்துவது என்ன என்பதில் சந்தேகம் எதையும் விட்டு வைக்காத வராகவும் இருந்தார். எருசலேமில் இருந்து வந்த மனிதர்களிடத்தில் அவர், "நான் கிறிஸ்து அல்ல" (1:20) என்று கூறினார். மற்றும் தாம் எலியாவோ[4] அல்லது மோசேயினால் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசியானவரோ அல்ல (1:21; உபா. 18:15ஐக் காணவும்) என்றும் அவர் அறிவித்தார். சுருக்கமாய்க் கூறினால், அவர்கள் யாருக்காகக் காத்திருந்தார்களோ, அவர் தாம் அல்ல என்பதை யோவான் கூறினார். மாறாக அவர் ஏசாயா 40:3லிருந்து மேற்கோள் காண்பித்து, தம்மை ''கர்த்தருக்கு வழியைச் செவ்வை பண்ணுங்கள் என்று … வனாந்தரத்தில் கூப்பிடுகிறவனுடைய சத்தமா யிருக்கிறேன்" (1:23) என்று அடையாளப்படுத்திக் கொண்டார். அவர் ஒரு செய்தியாளராகவும் மற்றும் ஒரு முன்னோடியாகவும் மட்டுமே இருந்தார். யோவான் வந்த பிறகு, அவர் யாருடைய மிதியடி வாரை அவிழ்க்கக் கூடத் தான் தகுதியற்றவன் என்று குறிப்பிட்டாரோ, அவர் (இயேசு) வந்தார்.

யோவான் ஸ்நானன் தமது வார்த்தையிலும் தமது ஊழியத்திலும் உண்மையுள்ளவராய் இருந்தார். அடுத்த நாளில் இயேசு வந்து கொண்டிருந் ததை அவர் கண்ட பொழுது, "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (1:29) என்று யோவான் அறிவித்தார். இந்த சுவிசேஷத்தில் இயேசுவின் ஞானஸ்நானமானது பதிவு செய்யப் பட்டிராதிருப்பினும், இயேசுவின் மீது தேவ ஆவியானவர் புறாவைப்

போல் பரலோகத்திலிருந்து இறங்கி வந்ததைத் (1:32) தாம் கண்டிருந்ததாக யோவான் ஸ்நானன் எடுத்துரைத்த பொழுது அவர் அந்நிகழ்ச்சியை மறைமுகமாய்ச் சுட்டிக் காண்பித்தார். பிறகு அவர், "... இவரே தேவனுடைய குமாரன்" (1:34) என்று அறிக்கையிட்டார். யோவான் ஸ்நானனுடைய கண்களில் இயேசு தேவனுடைய ஒரு குமாரன் என்பதாக இல்லை; அவர் தேவனுடைய ஒரே குமாரனாக இருந்தார். அவர் தேவனுடைய ஒரு ஆட்டுக்குட்டியாக இல்லை; அவர் தேவனுடைய ஒரே ஆட்டுக்குட்டியாக இருந்தார்.

## அந்திரேயாவின் சாட்சியம் (1:35-42)

அடுத்த நாளில் யோவான் தமது சீஷர்களுக்கு இயேசுவை "தேவ ஆட்டுக்குட்டி" (1:36) என்று மீண்டும் சுட்டிக்காட்டினார், எனவே அவர்கள் யோவானை விட்டு, இயேசுவைப் பின்தொடர்ந்தார்கள். அவர்களில் ஒருவரான அந்திரேயா[5] என்பவர் இயேசுவை "ரபீ" (1:38) என்று அழைக்கத் தொடங்கினார், இது அவர் இயேசுவை ஒரு மாணவர் - ஆசிரியர் உறவுமுறையில் பின்பற்றத் தயாரானார் என்பதைச் சுட்டிக்காட்டியது. இருப்பினும், அவர் பின்பற்றுவதற்கான காரணமானது இயேசுவின் ஞானத்தினால் ஈர்க்கப்பட்டது என்பதை விட இன்னும் அதிக ஆழமானதாக இருந்தது. அவர் உடனடியாகத் தமது சகோதரர் சீமோன் பேதுருவைக் கண்டு, "நாங்கள் மேசியாவைக் கண்டோம்" (1:41) என்று கூறினார். வசனப் பகுதியின் இந்தக் கருத்தின் மூலம், இயேசு தேவ ஆட்டுக்குட்டியென்றும், தேவனுடைய குமாரன் என்றும், ரபீ என்றும் மற்றும் மேசியா என்றும் அறிவிக்கப்பட்டார்.

## பிலிப்பு மற்றும் நாத்தான்வேல் ஆகியோரின் சாட்சியம் (1:43-49)

இயேசு "நீ எனக்குப் பின்சென்று வா" (1:43) என்ற வாழ்வை மாற்றும் வார்த்தைகளினால் அழைத்தார். பிறகு பிலிப்பு நாத்தான்வேலைக் கண்டு, மோசேயினாலும் தீர்க்கதரிசிகளினாலும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்தவரும், யோசேப்பின் குமாரனுமானவரைத் தாங்கள் கண்டதாக அவருக்குக் கூறினார் (1:45). நாத்தான்வேல் வெறுப்பு மனப்பான்மையுடன், "நாசரேத்திலிருந்து யாதொரு நன்மையும் உண்டாகக் கூடுமோ?" (1:46) என்று கேட்கையில், அவரது பதில்செயலானது ஆர்வம் குன்றியதாக இருந்தது. நாத்தான்வேல் ஈர்க்கப்படாதிருந்தாலும், அவர் பிலிப்புடன் இயேசுவைக் காணச் சென்றார். நாத்தான்வேல் இயேசுவை நெருங்கி வருகையில், அவரைக் குறித்து இயேசு, "இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன்" (1:47) என்று உரைத்தார். நாத்தான்வேல் தம்மை இயேசு எப்படி அறிந்தார் என்று வியப்படையந்து அதைப் பற்றி இயேசுவிடம் கேட்டார். இயேசுவின் பதிலானது நாத்தான்வேலின் இருப்பின் அடிப்படையையே மாற்றியது. "பிலிப்பு உன்னை அழைக்கிறதற்கு

முன்னே, நீ அத்திமரத்தின் கீழிருக்கும் போது, உன்னைக் கண்டேன் என்றார்" (1:48). ஒருவேளை நாத்தான்வேல் அத்திமரத்தின் கீழ் ஜெபமோ அல்லது தியானமோ செய்து கொண்டிருந்திருப்பார், மற்றும் இயேசுவின் வார்த்தைகள், அவர் நாத்தான்வேலின் இருதயத்தினுடைய உள்ளான எண்ணங்களை அறிந்திருந்ததைச் சுட்டிக்காட்டின. நாத்தான்வேலின் மாற்றத்திற்குக் காரணம் எதுவாயிருந்தாலும், அவர் ஒரு மனக் கடினமான வெறுப்புணர்விலிருந்து உற்சாகம் நிறைந்த சீஷராக உடனடியாக மாற்றம் பெற்றார், இன்னும் அதிகப் பகுத்தறிவுள்ள அறிக்கையானது குமிழியிட்டுக் கொண்டு வெளிவந்தது: "ரபீ, நீர் தேவனுடைய குமாரன், நீர் இஸ்ரவேலின் ராஜா" (1:49).

இயேசு மற்றும் (அவரைக்) கண்ணால் கண்ட சாட்சிகளுக் கிடையிலான இந்த முதல் சந்திப்புகள் முழுவதிலும், இந்த மனிதரைப் பற்றி விசுவாசம் கொள்வதற்கான விவரிப்பின் வார்த்தைகளை மக்கள் தேடிக் கொண்டிருப்பதாகக் காணப்படுகின்றனர். இது அவர்கள் ஐந்து வண்ணப் பென்சில்களை மட்டும் ("ஆட்டுக்குட்டி," "தேவனுடைய குமாரன்," "ரபீ," "மேசியா," "அரசர்") வைத்துக் கொண்டு ஒரு அழகிய சூரிய மறைவின் சித்திரத்திற்கு வண்ணந் தீட்ட முயற்சிப்பது போல இருக்கின்றது. அவர்கள் கண்ட ஒளிவெள்ளத்திற்கு இவைகளில் எதுவும் நியாயமானதைச் செய்ய முடியாது! மிக முக்கியமான அறிக்கையானது இன்னும் வர வேண்டிய தாயிருந்தது, ஏனெனில் இயேசு தாம் யார் என்பதைப் பிற்பாடு தமது சொந்த வார்த்தைகளினாலேயே சுட்டிக்காட்டினார் (4:26).

## இயேசுவின் சாட்சியம் (1:50, 51)

நாத்தான்வேலைப் பிலிப்பு அழைப்பதற்கு முன்பே அவரை இயேசு அத்திமரத்தின் கீழ் கண்டதாகக் கூறிய அந்தச் சிறிய விஷயத்திற்கே நாத்தான்வேலின் தடையற்ற பதில்செயலைக் கண்டு இயேசு வியப்படைந்த தாகக் காணப்படுகின்றது. அதைக் காட்டிலும் அதிகமான ஈர்ப்புடைய விஷயங்களை நாத்தான்வேல் பிற்பாடு காண்பார் என்று அவருக்கு இயேசு அறிவித்தார்: ''வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனுஷ குமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும், இறங்குகிறதையும் நீங்கள் இது முதல் காண்பீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்'' (1:51). வானம் திறக்கப்பட்டிருக்கும் என்று அவர் உரைத்தார். இவ்விடத்தில் உள்ள கிரேக்க வார்த்தைக் கட்டமைப்பானது (நிகழ்கால வினை எச்சமானது) வானம் திறக்கப்பட வேண்டியதாயிருந்தது, மற்றும் அது திறக்கப்பட்டதாகவே நிலைத்திருக்க வேண்டியதாகவும் இருந்தது என்று சுட்டிக்காட்டுகின்றது. அது திறக்கப்பட்ட நிலையிலேயே நிற்க வேண்டியதாயிருந்தது. நாசரேத்திலிருந்து வந்த ஒருவரான இயேசு, வானத்திற்கும் பூமிக்கும் உள்ள உறவுமுறையைத் தாம் என்றென்றைக்கு மாக மாற்ற இருப்பதாக உரிமைகோரினார்! பரலோகத்தின் ஒரு கண நேரக் கண்ணோட்டத்தை நாத்தான்வேலுக்கு அவர் வாக்களிக்கவில்லை. மாறாக, பரலோகத்தின் மகிமையானது அவருரில் என்றென்றைக்கும் வெளிப்

படுத்தப்படும் என்று அவர் கூறினார். பிறகு இயேசு “மனுஷ குமாரன்” என்று தம்மைப் பற்றிக் குறிப்பிட்டார், இது சுவிசேஷங்களில் அவருடைய பிரியமான சுய - விளக்கமாக உள்ளது. ஆர்வமிக்க இவ்விளக்கமானது பழைய ஏற்பாட்டில் ஒரு வளமையான பின்னணியைக் கொண்டுள்ளது. இயேசுவின் நாட்களில் பொதுவான தவறான பயன்பாட்டினால் கறைப்படுத்தப்பட்டிராத ஒரு தீர்க்கதரிசன மொழிநடையாக இது இருந்த காரணத்தினால், இயேசு இதை அடிப்படையாகப் பயன்படுத்தினார் என்று தோன்றுகின்றது. “மேசியா” மற்றும் “இஸ்ரவேலின் அரசர்” ஆகிய இரு சொற்றொடர்களும் இராணுவ உய்த்துணரும் அர்த்தம் கொண்டிருந் தவைகள், அவர் இவைகளைத் தமக்குப் பயன்படுத்த விரும்பாதிருந்தார், மற்றும் பிற இயற்பெயர்கள் யாவும் நாசரேத்தூர் இயேசு யார், அவர் என்னவாக வந்தார் என்பதை ஒரு பகுதி மட்டுமே விளக்கப்படுத்தின. ஆகையால் இயேசு “மனுஷ குமாரன்” என்று தம்மை அழைத்தார். இந்தச் சொற்றொடரானது ஒரே வேளையில் அவருடைய தெய்வீகத்துவத்தையும், மனிதத்துவத்தையும் சுட்டிக் காண்பித்தது. இவ்விதமாக, தீர்க்கதரிசிகள் இயேசுவைப் பற்றிய கருத்தை விளக்கப்படுத்துவதற்குப் பயன்படுத்திய கருத்தையும் அதே வேளையில் இயேசு தம்முடைய சொந்த வார்த்தை களினாலேயே தம்மை அடையாளப்படுத்தவும் இச்சொற்றொடர் இயேசுவை அனுமதித்தது.

## முடிவுரை

யோவான் சுவிசேஷத்தின் தொடக்கத்திலேயே நாம் நின்று கொண்டிருக்கையில், “இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய்” என்ற வார்த்தைகள் நமக்கும் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. நாம் பல ஆண்டுகளாக இயேசுவை அறிந்திருந்தாலும், இவைகளைக் காட்டிலும் பெரியவற்றைக் காண்போம். நாம் ஆறுவாரக் குழந்தையாக இருந்ததில் இருந்து வேதாகம வகுப்புகளுக்குச் சென்றிருந்தாலும், இவைகளைக் காட்டிலும் பெரியவற்றை நாம் காண்போம். கிறிஸ்தவப் பயிலகங்களில் இருந்து நாம் பட்டங்களைப் பெற்றிருந்தாலும், இவைகளைக் காட்டிலும் பெரியவற்றை நாம் காண்போம். நாசரேத்தூர் இயேசுவை நாம் மீண்டும் நோக்கிப் பார்க்கும் ஒவ்வொரு முறையும் பரலோகம் திறந்து நிற்கிறதை நாம் காண்கின்றோம்.

எந்த ஒரு உறவு முறையிலும், ஒருவர் மற்றவரைப் பற்றி அறிவதை நிறுத்திக் கொள்ளுதல் என்பது மாபெரும் அபாயங்களில் ஒன்றாக உள்ளது. இன்னொரு நபரைப் பற்றி நீங்கள் “உள்ளும் புறம்பும்” முற்றிலுமாய் அறிந்துள்ளதாக நினைத்துக்கொள்ளுதல் என்பது ஒரு பாங்கற்ற விழிப்புணர்வுக்கு உங்களைத் தகவமைத்துக் கொள்வதாக உள்ளது! எந்த உறவுமுறைகளின் உயிருள்ள தன்மையும் தொடர்ந்த மற்றும் பரஸ்பரமான கண்டறிதல்களிலேயே அஸ்திபாரப்படுத்தப்பட்டுள்ளது. தங்கள் வாழ்வு முழுவதிலும் ஒருவர் மற்றவரை அறிந்துள்ளவர்கள் அல்லது ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகத் திருமண வாழ்வை வாழ்ந்திருக்கும் தம்பதியரும்

கூட ஒருவர் மற்றவரைப் பற்றி இன்னும் அதிகமாக அறிய வேண்டியவர்களாக உள்ளனர். இயேசுவைப் பற்றி நீங்கள் இவ்விதமாக உணருகின்றீர்களா?

நாம் படித்துக் கொண்டுள்ள வசனப்பகுதியானது, நமது வண்ணப் பென்சில்கள் உள்ள பெட்டி மிகவும் சிறியதாக உள்ளதென்று நமக்கு நினைவூட்டுகின்றது: இயேசுவை விவரிக்க நாம் கொண்டுள்ள வகைகள் எப்பொழுதுமே போதுமற்றவைகளாகவே இருக்கும். இதை உணர்ந்தறிந்த நிலையில், நீங்கள் தொடர்ந்து அவரைத் தேடுவீர்களா? நீங்கள் தொடர்ந்து உங்களை அவர் வியப்படையச் செய்ய அனுமதிப்பீர்களா? சில வேளைகளில் அவர் உங்களைக் கடிந்துகொண்டு மற்றும் உங்கள் வசதியான யூகங்களைக் குறித்து அறைகூவல் விடுப்பார் என்பதை அறிந்து, நீங்கள் தொடர்ந்து அவரைப்பற்றி வாசிப்பீர்களா? இயேசு யாராயிருக்க வேண்டும் என்ற உங்கள் உருவகத்திற்கு அவர் பொருந்திவர வேண்டுமென்று வற்புறுத்துவதை விட்டு, அவர் தம்முடைய வார்த்தையினாலும் செயலினாலும் உங்களுக்குத் தம்மை விளக்கப்படுத்த அனுமதிப்பீர்களா? இன்றைய நாளில் நீங்கள் வாழ்வில் எங்கிருந்தாலும், இந்த சுவிசேஷத்தில் இயேசுவைத் தொடர்ந்து தேடினால், "நீங்கள் இவைகளைக்காட்டிலும் பெரியவற்றைக் காண்பீர்கள்."

இயேசு பிலிப்புவை அழைத்த பொழுது, அவர் (இயேசு) "எனக்குப் பின் சென்று வா" என்று மட்டுமே கூறினார். பிலிப்புவின் வாழ்வில் அந்த வேளையில், அவர் இயேசுவைப் பற்றிப் புரிந்து கொள்ளாதது அதிக மாயிருந்தது, மற்றும் அவர் சிறிதளவே புரிந்து கொண்டிருந்தார். இருந்த போதிலும் அவர் பின்பற்றினார் - மற்றும் பின்பற்றுதலில் அவர் இயேசு யாராக இருந்தார் என்பதைப் படிப்படியாகக் காண வந்தார். நாம் இயேசுவைப் புரிந்துகொள்ள விரும்பினால், நாம் அவரைப் பின்பற்ற விருப்பமுள்ளவர்களாக இருக்க வேண்டும்; ஏனெனில் பின்பற்றுதலில்தான் நாம் அவரைப் புரிந்து கொள்ள முடியும்.

---

குறிப்புகள்

[1]Patricia MacLachlan, *Sarah, Plain and Tall* (New York: Harper Trophy, 1985), 15. [2]அப். 21:38ஐக் காணவும். [3]இந்த சுவிசேஷத்திலிருந்து பிரசங்கிக்கும்பொழுது, "யூதர்கள்" என்ற சொல் விளக்கமானது மிகக் கவனமாக விவரிக்கப்பட வேண்டும். இயேசுவும் அவருடைய சீஷர்களும் யூதர்களாயிருந்ததால், இது ஒரு முழு இனத்திற்கான குறிப்பாயிருப்பதில்லை என்பது தெளிவு. இதை "யூதர்கள்" என்பதைக்காட்டிலும் "எருசலேமில் இருந்த யூதத் தலைவர்கள்" என்று விளக்கப்படுத்துவது மிகச் சிறந்தது, ஏனெனில் சில தீர்க்கதரிசிகள் மக்களை புரட்சி செய்ய எழுப்பி விட்டால் இவர்களே அதிகம் இழப்புக்குள்ளாகுபவர்களாய் இருந்தார்கள். [4]மல். 4:5ஐக் காணவும், மத். 11:14ல் இயேசு, மல்கியாவில் பேசப்பட்ட எலியா யோவான் ஸ்நானனே என்று எடுத்துரைத்தார். யோவா. 1:21ல் யோவான் ஸ்நானன் தம்மைக் குறித்து இயேசு கூறியவற்றிலிருந்து முரண்படவில்லை, ஆனால் அதற்குப் பதிலாக பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசியான எலியா மரித்தோரிலிருந்து

*எழுந்தார் என்ற நேரடி அர்த்தமான கருத்தையை அவர் புறக்கணித்தார். [5]சுவிசேஷங்களில் அந்திரேயா அமைதியான பண்புடையவராகச் சித்தரிக்கப் படுகின்றார்; இருப்பினும் யோவான் சுவிசேஷத்தில் இவர் தோற்றமளிக்கும் மூன்று இடங்களிலும், இவர் யாரேனும் ஒருவரை இயேசுவிடம் அழைத்துக் கொண்டு வருகின்றார். முதலாவது பேதுருவாக இருந்தார் (1:41, 42); பிறகு அப்பங்கள் மற்றும் மீன்களுடன் இருந்த ஒரு சிறு பையன் இருந்தான் (6:8, 9); கடைசியாக, கிரேக்கர்கள் இருந்தனர் (12:20-22).*

## *தேவன்/மாம்சம்*

*தேவன்/மாம்சம் என்ற முரண் தொடையானது புரிந்து கொள்ள மிகவும் கடினமானதாக உள்ளது. முதல் நூற்றாண்டின் முடிவில், ''டொஸீட்டிஸ்ட்ஸ்'' (''காணப்படுவதற்கு'' என்பதற்கான கிரேக்க வார்த்தையிலிருந்து வந்தது) என்று அறியப்பட்ட ஒரு குழுவானது இயேசு மாம்சத்தில் வாழ்ந்ததாக மட்டுமே காணப்பட்டார் என்று நம்பியது. இயேசு இந்த உலகினாலும் மனிதத்துவத்தின் எல்லா பலவீனங்களினாலும் தொடப்படாதவராக நிலைத்திருந்தார் என்ற கருத்து அவர்கள் சிந்தையில் இருந்தது. அதற்குச் சற்றுப் பிறகு, "*Gnostics*" என்பவர்கள் (இவர்கள் "அறிவு" என்பதற்கான கிரேக்க வார்த்தையிலிருந்து இப்பெயரை எடுத்துக் கொண்டார்கள்) எழும்பினார்கள். இம்மக்கள், ஆவி ஆவியாகவே உள்ளது, மாம்சம் மாம்சமாகவே உள்ளது, இவ்விரண்டும் ஒருபோதும் கலக்க முடியாது என்று நம்பினார்கள். இவ்விதமாக, அவர்களைப் பொறுத்தமட்டில், தேவன்/மாம்சம் என்பது இயலாத ஒன்றாக இருந்தது. அப்பொல்லினரியுஸ் (கி.பி. 310-385) என்பவரைப் பின்பற்றியவர்கள் இக்கருத்துப் பற்றி பிரச்சனைகள் கொண்டிருந்த மூன்றாவது குழுவினராவார்கள். சீரியாவில் இருந்த சபையின் இந்த முன்னோடி இயேசு தெய்வீகமானவராயிருந்தார் என்று பலமாக வாதிட்டார், ஆனால் இயேசு முற்றிலும் மனிதராயிருந்தார் என்ற கருத்தை அவர் மறுத்தார். இயேசு பாவம் செய்யத் தம்மை அனுமதிக்கும் முழுமையான சுயாதீனமுள்ள சித்தத்தைக் கொண்டிருந்தார் என்பதை இவர் நம்பவில்லை. "வார்த்தை மாம்சமானார்'' என்ற கருத்து எப்போதும் கடினமாதாகவும், சில வேளைகளில் விவாதத்திற்குரியதாகவும் இருப்பினும், இது இயேசுவின் இயல்பைப் புரிந்து கொள்வதற்கு அவசியமானதாக உள்ளது.*